மாலை முரசு
பக்கங்கள் 17
முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 16 ஞாயிற்றுக்கிழமை 03.12.2023 அதிர்வு 125

## டெங்கு நோயால் 46 பேர் உயிரிழப்பு

இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 30ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் நாடு பூராகவும்

டெங்கு நோயாளர்கள் 76 ஆயிரம் பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுள் 47.1 வீதமானவர்கள் 04







### "வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் அராஜகம் ஒழிக"

# "அப்பாவிகளைத் தண்டிக்காதே; குற்றவாளிகளைத் தப்பவிடாதே"

### அலெக்ஸின் படுகொலைக்கு நீதி கோரிப் போராட்டம்




( எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன் )

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் கொடூர சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்த சித்தங்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸுக்கு நீதி கேட்டு வட்டுக்கோட்டையில் இன்று கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும் வீதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு வீதித் தடைகள் அமைக்கப்பட்டிருந்தன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டைச் சந்தியில் பிற்பகல் 3 மணியளவில் உயிரிழந்த இளைஞருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு போராட்டம் ஆரம்பமானது. 04

## பில்கேட்ஸுடன் ரணில் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மைக்ரோசாஃப்ட் நிறுவனர்களில் ஒருவரும் பெரும் பணக்காரருமான பில்கேட்ஸுக்கும் இடையிலான சந்திப்பு டுபாயில் இன்று நடைபெற்றது.

டுபாயில் உள்ள எக்ஸ்போ சிட்டியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டின்போதே 04



### நன்னடத்தை பாடசாலையில்

## சிறுவன் அடித்துக்கொலை; மேற்பார்வையாளர் கைது!

(பாறுக் ஷிஹான்)

சிறுவர்நன்னடத்தைபாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் 04



## 15 ஆயிரம் படையினர் தப்பியோட்டம்

### கடந்த பத்து மாதங்களில் மாத்திரம்; நாட்டுக்கு ஆபத்து என்று எச்சரிக்கை

இலங்கை முப்படைகளில் இருந்தும் கடந்த பத்து மாதங்களில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் தப்பியோடியுள்ளனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது. இது நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து மாதங்களில் முப்படைகளின் 140 அதிகாரிகள் உட்பட 15 ஆயிரத்து 360 பேர் பாதுகாப்புப் பிரிவில் இருந்து வெளியேறியுள்ளனர். 04





# ‘ட்ரோன்’ தொழில்நுட்பம் மூலம் பீடைநாசினி வீசும் முறைமை!

## அம்பாறையில் அறிமுகம்; விவசாய துறையில் புதிய பரிமாணம்!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் “ட்ரோன்” தொழில்நுட்பம் மூலம் பீடை நாசினி வீசுகின்ற புதிய நடைமுறை அறிமுக மாகியுள்து.

அம்பாறை மாவட்ட விவசாய திணைக்களம் இது தொடர்பான விளக்க செயல் முறைப் பயிற்சியை அம்பாறை யில் நடத்தியது .

அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த பிரதேச விவசாய போதனாசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

விவசாய திணைக்கள பொறியி யலாளர் இதற்கான விளக்கத்தையும் செயல்முறை பயிற்சியையும் அங்கு



வழங்கினார்.

ஒரு ஏக்கர் வயல் நிலத்துக்குப் பீடை நாசினி வீசுவதற்கு நான்கு நிமிடங்கள் போதுமானது என்பதை இதன் மூலம் அறிய முடிந்தது.

இவ்வாறான விளக்க செயன்முறை பயிற்சிகள் விவசாயிகள் மத்தியில் பிரதேச ரீதியாக முன்கொண்டு செல்லப் படவுள்ளன.

இந்தப் புதிய தொழில்நுட்ப முறை வேளாண்மை வயலுக்கு மாத்திர மல்லாமல் கரும்பு சோளம் போன்ற பயிர்செய்கைகளுக்கும் பயன் படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

# சட்டவிரோதமாகக் கடல் அட்டை பிடித்த 12 பேரைக் கைது செய்தது கடற்படை!





(ரஸீன் ரஸ்மின்)

மன்னார், சிலாவத்துறை, கொண டஞ்சிக்குடா கடற்பரப்பில் சட்டவிரோத மான முறையில் கடல் அட்டைகளை பிடித்த 12 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் புத்தளம், சிலாவத்துறை, மன் னார் மற்றும் வாங்கலை ஆகிய பகுதி களைச் சேர்ந்த 28 மற்றும் 48 வயது டையவர்கள் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வடமேற்கு கடற்படைக் கட்டளைக்குச் சொந்தமான இலங்கை கடற்படைக் கப்பல் சிலாவத்துறை கொண்டச்சிக்குடா கடற்பகுதியில், விஷேட ரோந்து நட வடிக்கைகளில் ஈடுபட்டது.

இதன்போது, கடல் பிரதேசத்தில் சந்தேகத்துக்கு இடமான நான்கு இயந்திர படகுகள் காணப்பட்டன. அதனை கடற்படையினர் பரிசோனை செய்தனர்.

இதன்போது, சட்டவிரோதமான முறையில் பிடிக்கப்பட்டதாக கூறப்படும் 1670 கடல் அட்டைகளைக் கடற்படையி னர் மீட்டுள்ளனர்.

சட்டவிரோதமாகச் சுழியோடி நடவ டிக்கையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படும் 12 பேர் இதன்போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சுழியோடி உபகரணங்கள் மற்றும் படகுகள் என்பன கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 12 பேரும், அவர்கள் பய ணித்த நான்கு டிங்கி படகுகளும், 1670 கடல் அட்டைகள் மற்றும் சுழியோடி உபகரணங்கள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை மீன்பிடி பரிசோதகர் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று கடற் படையினர் குறிப்பிட்டுள்ளனர்.




# எயிட்ஸ் தின விழிப்புணர்வு நிகழ்வு!

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் வழிகாட்டலிலும், கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என்.எம். தில்ஷான் ஒருங்கிணைப்பிலும், உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நிந்தவூர் ஆதார வைத்தியசாலை, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் நிந்தவூர் ஆயுள்வேத வைத்தியசாலை என்பவற்றின் பங்களிப்புடன் எயிட்ஸ் தின விழிப்புணர்வு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான விஷேட விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கு, வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில், வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம். பி. அப்துல் வாஜித் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நிந்தவூரைச் சேர்ந்த அல்- அஸ்ரக் தேசிய பாடசாலை, மதினா வித்தியாலயம், அரபா வித்தியாலயம், மினா வித்தியாலயம், இமாம் கஸ்ஸாலி வித்தியாலயம் மற்றும் அட்டப்பளம் விநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி மாணவர்கள் பங்குபற்றியதோடு, நிந்தவூர் தொழில் பயிற்சி நிலையத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

நிந்தவூர் பொலிஸ் நிலைய பிரதிநிதிகளும், பிரதேச செயலக பிரதிநிதகளும் கலந்து கொண்டனர்.





# திருகோணமலையில் விழிப்புணர்வு நிகழ்வு!

(ஹஸ்பர்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திருகோணமலை நகரசபை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் பொது நூலக மண்டபத்தில் சிறுவர்களுக்கான பற்சிகிச்சையும், பெரியோர்களுக்கான வாய்ப்புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வும் இடம் பெற்றன.

நிகழ்வில் திருகோணமலை நகர சபையின் செயலாளர் வெ. இராஜசேகர், நகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் என். பரமேஸ்வரன், நூலகத்தின் பிரதம நூலகர் க . யோகேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கடலரிப்பால் காவு கொள்ளப்படுகிறது சாய்ந்தமருது விளையாட்டு மைதானம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது கடற்கரை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பாரிய கடலரிப்பால் இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள பௌஸி ஞாபகார்த்த விளையாட்டு மைதானம் முழுமையாக இல்லாமல் போகும் ஆபத்தான நிலமை ஏற்பட்டுள்ளது.

கடலரிப்பைத் தடுப்பதற்கான கடலோரத்தில் பாறாங்கற்கள் போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இருபக்க அழிவு இந்த மைதானத்தைப் பாதித்து வருகின்றது.

சாய்ந்தமருது பிரதேசத்தில் சுத்தமான காற்றுள்ள சூழலில் உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு, ஏனைய பொது நிகழ்வுகளை நடத்துவதற்கும், விளையாட்டு போட்டிகளை நிகழ்த்துவதற்கும் இந்த இடத்தை தவிர மாற்றுவழி இல்லாத நிலை உள்ளது.

இந்த மைதானத்தை அழிவிலும் சிதைவிலும் இருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மிகத் துரிதமாக மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### டெங்கு நோயால்...

மேல் மாகாணத்தில் உள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலேயே அதிக நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்வருடம் மொத்தமாக 46 பேர் டெங்கு நோயால் மரணித்துள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

### 15 ஆயிரம்...

இதில் இராணுவத்தின் 99 அதிகாரிகளும், கடற்படையின் 26 அதிகாரிகளும் மற்றும் விமானப்படையின் 15 அதிகாரிகளும் அடங்குகின்றனர்.

இவ்வாறு முப்படைகளில் இருந்து தப்பியோடி தலைமறைவானவர்களைக் கைது செய்வதற்குப் பொது மன்னிப்பு காலம் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், தற்போது வரையில் தலைமறைவானவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஒப்பந்தக் கொலையாளிகளாகப் பாதாள உலகத் தலைவர்கள், முப்படைகளில் இருந்து தப்பியோடியவர்களைப் பயன்படுத்துகின்றனர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

### பில்கேட்ஸ்டன்...

இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பில்கேட்ஸ்க்கும் இடையில் விசேட கலந்துரையாடலும் நடைபெற்றது.

விவசாய நவீனமயமாக்கல், தரவுக் கட்டமைப்புகள் மற்றும் காலநிலை நிபுணத்துவத்துக்காக "Bill & Melinda Gates" மூலம் ஆதரவு வழங்குவதாக பில்கேட்ஸ் இதன்போது உறுதியளித்தார்.

### சிறுவன் அடித்துக்கொலை...

மேற்பார்வையாளரான பெண்ணைச் சந்தேகத்தில் கல்முனை தலைமையகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஸ்லாமபாத் பகுதியிலுள்ள பெண்கள் சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் கடந்த மாதம் 17ஆம் திகதி மணி ஒன்றைக் களவு செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொக்குவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சிறுவன், பின்னர் நீதிமன்ற வழக்கு விசாரணையின் பின்னர் நீதிவானின் உத்தரவின் பிரகாரம் குறித்த காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மர்மமான முறையில் மரணம் அடைந்தவர் மட்டக்களப்பு, கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ஆனந்த தீபன் தர்சான்ந் எனும் 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சிறுவனின் மர்ம மரணம் தொடர்பில் கடந்த புதன்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் உயிரிழந்துள்ளதாக தமக்கு அறிவிக்கப்பட்டது எனவும், சிறுவனின் உடலில் காயத் தழும்புகள் இருப்பதனால் மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது எனவும் பெற்றோர் தெரிவித்ததை அடுத்து கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்ட சிறுவனின் சடலம் அம்பாறை பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அங்கு சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின் பிரகாரம் குறித்த மரணம் அடி காயங்கள் காணப்படுகின்றன எனவும், உட்காயங்களினால் மரணம் சம்பவித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் பல்வேறு குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான எம்.எல் றபீக் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஜனகீதன் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் குறித்த பாடசாலைக்குச் சென்று தொடர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் குறித்த சிறுவனை அன்று தாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் 25 வயது மதிக்கத்தக்க அப்பாடசாலையில் கடமையாற்றும் மேற்பார்வையாளரான பெண் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதான சந்தேகநபர் நேற்றிரவு கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

தனது மகனின் மரணத்தில் பல விதமான பொய்க் குற்றச்சாட்டுகளைப் பாடசாலையின் நிர்வாகம் முன்வைக்கின்றது எனவும், மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ் தாங்கள் வாழ்கின்றார்கள் எனவும், தமது பிள்ளைக்கு நடந்த இதே போன்ற சம்பவங்கள் யாருக்கும் இடம்பெறக் கூடாது என்றும், பிள்ளையின் மரணத்தில் ஒரு நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் மரணம் அடைந்தவரின் தந்தை தெரிவித்துள்ளார்.

### அப்பாவிகளை...

நாகராசா அலெக்ஸின் மரணத்துக்கு நீதி கோரியும், வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டு வரும் சட்ட விரோத சித்திரவதைகளை நிறுத்தக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், "வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் அராஜகத்துக்கு முடிவு கட்டு!", "அப்பாவிகளைத் தண்டிக்காதே! குற்றவாளிகளைத் தப்பவிடாதே!!", "வேலியே பயிரை மேய்கின்றதா?", "எமது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்!", "தடுப்புக்காவல் படுகொலைகளை நிறுத்து!" போன்ற பதாகைகளை ஏந்திக் கோஷங்களை எழுப்பினார்கள்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், படுகொலை செய்யப்பட்ட அலெக்ஸின் உறவினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

போராட்டம் நிறைவுபெறும் தருவாயில் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸார் கலந்துரையாட முன்வந்தபோதும் போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.











# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒளிவிழா நிகழ்வு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒளிவிழா வெள்ளிக்கிழமை (01) காலை 9 மணிக்கு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டு திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்.

ஆசிரிய மாணவர்களுக்கு விசேட அருட்பிரசாதம் வழங்கி ஒளிவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர் மாணவர்களுக்கான பதக்கங்களை சூட்டியும் சான்றிதழ்களை வழங்கியும் கௌரவித்தார். இந்த நிகழ்வின் சிறப்பு விருந் தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கே. ஜெ பிரட்லி கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் பங்கு அருட்தந்தை எம.எல். ஒன்பேட் அடிகளார், மறைக்கல்வி நடுவு நிலைய இயக்குனர் அருட்பணி டபிள்யூ.ஜேம்ஸ் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இனிய விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சு. பரமானந்தம், சிரேஷ்ட விரிவுரையாளர்களான பப்சி மரியதாஸ், எஸ். கெலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வாழ்த்துரைகளை பிரதி அதிபர் க. கோபாலகிருஷ்ணன் கிறிஸ்தவ மன்ற காப்பாளர் பிரபாலினி தனம் ஆகியோர் நிகழ்த்தினர்.

கலாசாலையில் நீண்ட காலமாகக் கத்தோலிக்க பாடத்தை சிறப்புற போதித்தமைக்காக கிறிஸ்தவ மன்றத்தின் சார்பில் விரிவுரையாளர் யே. பாலகுமார் கௌரவிக்கப்பட்டார். கௌரவத்தைப் பேராயர் வழங்கினார்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தெற்கில் மட்டுமே பாதாள குழு

இலங்கை முப்படைகளிலிருந்தும் கடந்த பத்து மாதங்களில் 15 ஆயிரம் படையினர் வெளியே றியுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இக்கால கட்டத்தில் முப்படைகளின் 140 அதி காரிகள் உட்பட 15,360 பேர் பாதுகாப்பு பிரிவிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இதில் இராணுவத்தின் 99 அதிகாரிகளும், கடற்படையின் 26 அதிகாரிகளும் மற்றும் விமானப் படையின் 15 அதிகாரிகளும் அடங்குகின்றனர்.

இப்படி படையினர் சொல்லிக் கொள்ளாமல் படைகளை விட்டு ஓடுவது நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முப்படைகளிலிருந்து வெளியேறி தலைமறைவானவர்களைக் கைது செய்வதற்கு பொது மன்னிப்புக் காலம் மட்டுமே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. வேறு காத்திரமான நடவடிக் கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப் படுகின்றது.

தலைமறைவானவர்களைத் தேடுவதற்கோ கைது செய்வதற்கே தற்போது வரையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

பாதாள உலக தலைவர்கள் தமக்குத் தேவையான ஒப்பந்தக் கொலையாளிகளாக இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை பயன்படுத்துகின்றனர் என்றும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

நமது நாட்டில் பாதாள உலகக் குழு என்ற பெரும் மாபியா கூட்டம் தென்னிலங்கையில்தான் உள்ளது. இந்த மாபியாக் குழுவிடம் பல்லாயிரம் இயந்திரத் துப்பாக்கிகள், பயங்கரமான வெடிகுண்டுகள் போன்ற மோசமான ஆயுதங்கள் உள்ளன. குழுக் களாகச் சேர்ந்தும் தனித்தும் இயங்கும் இக்கூட்டத் தினர் பெரும்பாலும் பேரினத்தவர்கள் தான். அத னால் அவர்களை பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுகள் 'பயங்கரவாதிகள்' என்று அடையாளப்ப டுத்துவதில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற மிருகத் தனமான - கொடூரமான - சட்டங்கள் அவர்கள் மீது பாய் வ தில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக பாதாள உலகக் குழுவினர் என்கவுண்டரில் போட்டு தள்ளப்படுவதோடு சரி.

உண்மையில் பாதாள உலகக் குழுக்கள் வடக்கு, கிழக்கில்தான் - தமிழர் தாயகத்தில்தான் - உருவாகியிருக்க வேண்டும். அதற்குச் சாத்தியமான களச் சூழல் இங்குதான் இருந்தது. இருக்கின்றது.

நான்கு பெரிய தமிழ் இயக்கங்கள் அவ்வப்போது திடீரெனப் புலிகளால் தடை செய்யப்பட்டன. அந்த இயக்கங்களில் ஆயுதப் பயிற்சி பெற்ற பல்லாயிரம் உறுப்பினர்கள் திடீரென இயக்கங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு, அந்தரிப்பு நிலையில் சமூகத்துக்குள் விடப்பட்டனர். அந்த இயக்கங்களின் ஆயுதங்களும் அப்படியே அப்படியே பல இடங்களிலும் கைவிடப்பட்டன.

அதேபோல பல்லாயிரம் உறுப்பினர்களைக் கொண்டிருந்த புலிகள் இயக்கம் ஒரு நாள் முறியடிக்கப்பட்டது. அவர்களின் பன்னீராயிரம் போராளிகள் இப்போது சமூக வாழ்வுக்குத் திரும்பி விட்டனர். அவர்களில் பலர் வாழ்வாதாரங்களுக்குக் கஷ்டப்படும் நிலைமை இன்னும் நீடிக்கிறது. அவர்களில் பல்லாயிரம் பேர் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தும் பயிற்சிகளைத் தாராளமாக பெற்ற வர்கள். புலிகளின் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் கூட முற்றாக இன்னும் மீட்கப்படவில்லை.

இவை எல்லாம் வடக்கு - கிழக்குத் தமிழர் தாய கத்தில் பாதாள உலகக் குழுக்கள் தோன்றுவதற்கான சாத்தியமான பின்னணிகளைத் தருபவை. ஆனால் அத்தகைய பாதாள உலகக் குழுக்கள் யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் கடந்தும் இங்கு தோன்றவில்லை. வெறுமனே வாள் வெட்டுகளில் ஈடுபடும் ஆவா குழுக்கள்தான் நம் மத்தியில் செயப்படுகின்றன.

எனினும், சட்ட ரீதியான ஆயுதப்படைகளை வைத்திருப்பதாக கூறப்படும் இலங்கை அரசுத் தரப்பின் மட்டத்தில், தென்னிலங்கையில்தான் பாதாள உலகக் குழுக்கள் ஆழமாக வேரோடி நிலை கொண்டுள்ளன. இலங்கை ஆயுதப் படை களின் விட்டோடிகள் அந்தக் குழுக்களில் காத்தி ரமாக பங்களித்து வருகின்றனர்.

இதிலிருந்து தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தின் கொள்கைப் போக்கின் வலிமையை - தாக்கத்தை - இலங்கை அரசும் நோக் கர்களும் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

# கல்முனை ஸாஹிரா கல்லூரியில் 23 மாணவர்கள் 9ஏ சித்தியடைவு!

(யூ. கே. காலித்தீன்)

கல்முனை ஸாஹிரா கல்லூரியில் க. பொ. த. சாதாரண தர பரீட்சை முடிவு களின் படி மொத்தமாக 23 மாணவர் கள் 9 ஏ சித்திகளையும், 11 மாணவர் கள் 8ஏ சித்திகளையும் பெற்றுள்ள னர்.

இந்தச் சாதனை கல்முனை கல்வி மாவட்டத்தில் ஒரு பாடசாலை பெற்ற அதி சிறந்த பெறுபேறாகும்.

அதேநேரம் பொத்துவில், அக்க ரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய கல்வி வலயங்களில் முதன்மை இடத்தை கல்முனை சாஹிராக் கல்லூரி வரலாற்று சாதனை படைத்துள்ளது.

# மட்டு. வின்சென்ட் சாதனை!

(பழுவூரான்)

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றிய மட்டக்களப்பு வின்சென்ட் உயர்தர தேசிய பாடசாலை மாணவிக ளில் 56 பேர் 9ஏ சித்தி பெற்றுள்ளனர்.

அத்துடன் மெதடிஸ்த மாணவர்களில் 14 பேரும், சென் மைக்கல் கல்லூரியில் 26 பேரும், சென் சிசிலியாஸ் கல்லூ ரி மாணவர்களில் 24 பேரும், கல்லடி விவேகானந்தா மகளீர் கல்லூரி மாண விகளில் 9 பேரும், கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை மாணவர்களில் 5 பேரும், மகாஜனாக் கல்லூரி மாணவர் களில் 2 பேரும், கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயம், குடியிருப்பு கலைமகள் மகாவித்தியாலயம் மற்றும் தாளங்குடா ஸ்ரீ விநாயகர் வித்தியாலய மாணவர்களில் தலா ஒவ்வொருவரும் 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில் மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 139 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்றுச் சாதனை படைத்துள் ளனர்.







# களுவாஞ்சிக்குடியில் 'கலைகளின் சங்கமம்'

(வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலகத்தின் கலைகளின் சங்கமம் நிகழ்வு பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் கலை மற்றும் இலக்கிய திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலிலும் இந் நிகழ்வு இடம் பெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக் களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் பன்னிருமாத வேலைத் திட்டங்களின் ஒரு அங்கமாக இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இரு கட்டங்களாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதலாவது கட்டமாக அலுவலக உத்தியோகத்தர்களுக்கான கலை நிகழ்வுகளும், இரண்டாவது கட்டமாக அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.






# வத்தளை ஜாஎல பகுதிக்குட்பட்ட சாரணர் பயிற்சி பாசறை முகாம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வத்தளை ஜாஎல சாரணர் பகுதிக்கு உட்பட்ட சாரணர் இயக்கங்களின் ஒன்றுகூடல் ராகம பசிலிக்கா பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

23 சாரணர் இயக்கங்கள் பங்கு பற்றிய இந்தச் சாரண முகாமுக்கு இந்த வருடம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் மல்வான அல்-முபாரக் தேசிய கல்லூரியிலிருந்து 34 சாரணர்கள் பங்குப்பற்றினர்.

மாணவர்களின் ஒழுக்க விழுமியங்கள், தலைமைத்துவம், மாணவர்களுக்கு சுற்றுப்புற சூழலில் அனுசரித்த வாழ்க்கை முறை, நேரத்துக்கு வேலை செய்தல், குழுக்களாக வேலை செய்தல் போன்ற மாணவர்களின் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தும் அம்சங்களை உள்ளடக்கிய பல பயிற்சிகள் இந்த முகாமில் வழங்கப்பட்டன.







# பாலஸ்தீன ஆதரவு தின நிகழ்வு கண்டியில்

**(இக்பால் அலி)**

ஐக்கிய நாடுகள் சபையின் பாலஸ்தீன ஆதரவு தின நிகழ்வு கண்டி சிற்றி சென்றர் வளாகத்தில் அமைந்துள்ள சஹஸ் உயன பூங்காவில் கண்டி ஐக்கிய நாடுகள் சபையின் பாலஸ்தீன ஒருமைப்பாட்டு அமைப்புகளுக்கான சம்மேளத்தின் தலைவர் வசீர் முக்தாது தலைமையில் இடம்பெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராகக் கண்டி மாவட்ட செயலர் சந்தன தென்னகோன், மாவட்ட உதவிச் செயலர். கண்டி மாநகர ஆணையாளர், முன்னாள் கொழும்பு மாநகர முதல் உமர் காமில் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கண்டியிலுள்ள சிங்கள தமிழ் முஸ்லிம், கிறிஸ்தவ சிவில் சமூக அமைப்புக்கள், சமயப் பிரதிநிதிகள், புத்திஜீவிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலைப் பிள்ளைகள், கல்வியலாளர்கள், சமயப் பெரியார்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# இந்திய – சிலோன் நட்புறவு அமைப்பின் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு!



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இந்திய–சிலோன் நட்புறவு அமைப்பும், லங்கா சாதனையாளர் மன்றமும் இணைந்து நடத்திய வருடாந்த நிகழ்வு கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இடம்பெற்றது.



இவ்விழாவில் பல பிரதேசங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாண வர்களுக்கான அன்பளிப்பு பொருள்கள் கையளிக்கப்பட்டதுடன், மருத்துவம், புத்தாக்கம், பொலிஸ் சேவையில் பெண் அதிகாரியின் அதி உச்ச கடமை என பல்துறைகளில் உள்ள ஆளுமைகளை வெளிப்படுத்திய கலைஞர்கள், மற்றும் சமூக சேவையாளர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன.

இவ் விழாவில் பிரதம அதிதியாக பேராசிரியர் கலாநிதி மது கிருஷ்ணன், அமெரிக்காவின்

புகழ்பெற்ற விஞ்ஞானி மற்றும் AUGP/UNUGP USA இன் தலைமை அதிகாரி, இந்திய சட்ட உரிமை நுகர்வோர் பாதுகாப்பு சங்கத்தின் நிறுவனத் தலைவர் டாக்டர் எஸ் முத்துராமலிங்கம், இலங்கை அழகி வியானா பீட்டர்ஸ் மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் உறுப்பினர்கள், மலையக கலாசார ஒன்றியத்தின் அமைப் பாளர்கள் பல சிவில் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# பொத்துவில் மாணவர்கள் மத்தியில் நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்வு





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பொத்துவில் மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருள்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருள்களின் அரச கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்மந்தமாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இவ் விழிப்புணர்வு நிகழ்வுக்குப் பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி இஷட். எம். ஸாஜீத் மற்றும் புலன் விசாரணை அதிகாரி எம்.எச்.எம். றிபாஜ் ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.



# தென் கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்குக் கௌரவம்

**(நூருல் ஹுதா உமர்)**

தென் கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பேராசிரியர்களான எஸ்.எம்.எம். மஸாஹிர், ஆர்.ஏ.சர்ஜுன் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும் பீடத்தின் ஆரம்பம் முதல் இன்றுவரை கடமையாற்றிய பீடாதிபதிகளின் படங்களை ஞாபகார்த்த நிமிர்த்தம் காட்சிப் படுத்தும் நிகழ்வும் பீடாதிபதி, எம்.எச்.ஏ. முனாஸ் தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகத் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டார்.

வரவேற்புரையை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.எம். நைறூஸ் நிகழ்த்தினார்.

பீடாதிபதி எம்.எச்.ஏ.முனாஸ் தனது தலைமையுரையில் கௌரவிக்கப்பட்ட பேராசிரியர்களை வாழ்த்தினார்.



இங்கு பேராசிரியர் எஸ்.எம்.எம். மஸாஹிர், பேராசிரியர் ஆர்.ஏ.சர்ஜுன் ஆகியோர் ஏற்புரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யு.எல். அப்துல் மஜீத், வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ். சபீனா, சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், நூலகர் எம்.எம். றிபாய்தீன், பல்கலைக்கழக ஊடகப் பிரிவின் இணைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எப்.எச்.ஏ. ஷிப்லி, பீடத்தின் ஏனைய முதுநிலை விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பீடத்துக்கு புதிதாக இணைந்து கொண்ட மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# மாணவர்கள் பாராட்டிக் கௌரவிப்பு

நோட்டன் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில், 2022 – 2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்கள், உயர்தரத்தில் சிறப்பு சித்தி பெற்ற மாணவர்கள், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அட்டன் கார்பெக்ஸ் கல்லூரியில் வாசகர் வட்டத்தின் தலைவர் நோட்டன் ராம் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பேராசிரியர் விஜயச்சந்திரன், வைத்திய கலாநிதி வசந்தராஜா, மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ராஜாராம், அட்டன் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவகுமார், கொத்மலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி இங்கர்சால், கண்டி கல்வி வலயம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரமேஸ்பாபு, கம்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் உமேஸ்நாதன், ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம், ஐ.எப்.ஓ. நிறுவனத்தின் முகாமையாளர் விக்னேஸ்வரன், அதிபர்களான வில்சன், சிவானந்தராஜா, சந்திரகுமார், ஜேம்ஸ் விக்டர் ரவிச்சந்திரன், சிவபிரகாசம் ஆகியோருடன் , ஆசிரியர்கள் பெற்றோர்கள், வாசகர் வட்ட உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட நோட்டன், காசல்ரி பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்று பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்கள் உட்பட உயர்தரத்தில் சித்தி பெற்ற 31 மாணவர்கள், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 11 மாணவர்கள் அனைவரும் பதக்கம் அணிவித்து சான்றிதழ், அப்பியாசக் கொப்பிகள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். இதன் போது கற்பித்த ஆசிரியர்கள், அதிபர்கள் பெற்றோர்களால் கௌரவிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வுகளை ஆசிரியர்களான விஸ்வகேது, சந்திரமோகன் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.















# கல்லடி பிரதான சந்தியில் வீதிச் சமிஞ்ஞை பொருத்துக!

## பொது மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை

(பழுவூரான்)

கல்லடி பிரதான சந்தியில் வீதிச் சமிஞ்ஞை விளக்குகளைப் பொருத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலை, விவேகானந்தா மகளிர் கல்லூரி, இராம கிருஷ்ண மிஷன், சாரதா பாலர் பாடசாலை, சிவானந்தா பாடசாலை விடுதி, விளையாட்டு மைதானம், வாசிகசாலை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அலுவலகம், மணி மண்டபம், துளசி கலாசார மண்டபம், பேச்சி அம்மன் ஆலயம், சித்தி விநாயகர் கோவில் போன்ற 12 முக்கிய இடங்களுக்குச் செல்வதற்கான பிரதான பாதையாக புதிய கல்முனை வீதி அமையப் பெற்றுள்ளது.


இந்தப் பாதையூடாகப் பெரும் எண்ணிக்கையானோர் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்த நிலையில் சிவானந்தா பாடசாலை மற்றும் விவேகானந்தா மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகள் நிறைவடையும் போது நெருக்கடியான சூழ்நிலை ஏற்படுகின்றது.

இதன்போது அச்சத்துடனேயே மாணவர்கள் பாதையைக் கடக்க வேண்டியுள்ளது. இந்தச் சந்தியில் கடந்த காலங்களில் பாரிய விபத்துக்கள் இடம்பெற்றிருக்கின்றது .

இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு பாடசாலைக்கு முன்பாக உள்ள சந்தியில் சமிஞ்ஞை விளக்கைப் பொருத்துவது அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்தில் கொண்டு சமிஞ்ஞை விளக்கைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசவாழ் மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.






# தாமரைச் செல்வியின் இலக்கியப் பணியை பாராட்டி கனடா தாய்வீடு சிறப்பிதழ் வெளியீடு!

ஆஸ்திரேலியா குவின்ஸ்லாந்து மாநிலத்தில் வசிக்கும் எழுத்தாளர் தாமரைச் செல்வியின் அரை நூற் றாண்டு கால இலக்கியப் பணியை பாராட்டி கனடாவிலிருந்து வெளியாகும் தாய் வீடு மாத இதழ் சிறப்பிதழ் வெளியிட்டுள்ளது.

இந்த மாதம் (டிசெம்பர்) வெளியாகியிருக்கும் தாய் வீடு சிறப்பிதழில் இதர ஆக்கங்களுடன், தாமரைச் செல்வியின் எழுத்துலகம் தொடர்பான கட்டுரைகளின் விசேட இணைப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

தாமரைச் செல்வியின் வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் ஆக்கங்களை எழுத்தாளர்கள் சி. கருணாகரன், லெ. முருகபூபதி, யசோதா பத்மநாதன், சார்ள்ஸ் குணநாயகம், ரஞ்ஜனி சுப்பிரமணியம், தமிழக படைப்பாளி இந்திரன், சந்திரா இரவீந்திரன், ஆகியோர் எழுதியிருக்கின்றனர்.

தாரைச் செல்வியுடனான நேர் காணலை சேகர் தம்பிராஜா எழுதியுள்ளார். ஓவியராகவும் திகழும் தாமரைச் செல்வியின் சில ஓவியங்களும் இந்தச் சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் கடந்த காலங்களில் தாமரைச்செல்வியை பாராட்டி அட்டைப்பட அதியாக அவரை கௌர வித்த இலக்கிய இதழ்களின் முகப்பு களும் வெளிவந்துள்ளன.

கடந்த செப்ரெம்பர் மாதம், ஆஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கமும் தனது 23 ஆவது தமிழ் எழுத்தாளர் விழாவில் தாமரைச் செல்விக்கு இலக்கிய சாதனையாளர் விருது வழங்கி பாராட்டியது என்பதும் குறிப்பிடத்தக்கது.






# பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான நிகழ்வு மட்டக்களப்பில்!

(பழுவூரான்)

பால் மற்றும் பால் நிலைசார் வன்முறைக்கு எதிரான 16 நாள்கள் செயல்வாத வாரத்தின் ஆரம்ப நிகழ்வு வெள்ளிக்கிழமை (01) மட்டக்களப்பில் ஆரம்பமானது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகம் மற்றும் மட்டக்களப்பு தேவை நாடும் மகளிர் அமைப்பு ஆகியன இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், வன்முறையால் பாதிக்கப்பட்ட உடனடி தேவை வழங்குவதற்கான பேண்தகு உதவித் திட்டங்களை முற்படுத்திப் பால் மற்றும் பால் நிலைசார் வன்முறைக்கு எதிராக செயல்வாத வாரத்தின் நிகழ்வாக இது அமைந்திருந்தது.

மட்டக்களப்பு நகர் பஸ் தரிப்பிடத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வு வீதி நாடகத்தைத் தொடர்ந்து, விழிப்புணர்வு நடைபவனி மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகம்வரை சென்றது.

இதனைத் தொடர்ந்து பிரதான நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில், பிரதேச



செயலாளர் வி .வாசுதேவன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது 'குடும்ப வன்முறையை தூண்டும் போதை பொருள் பாவனை தடுப்போம்', 'மன உறுதிமிக்க சமூகத்தை கட்டியெழுப்புவோம்', 'இல்லத்து வன்முறையை இல்லாதொழிப்போம்', 'மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை அமைப்போம்', 'பெண்களுக்கான ஊதியத்தை முறையாக வழங்குவோம்', 'பெண்களுக்கு எதிரான பாலியல் சுரண்டலை இல்லாது ஒழிப்போம்', 'தீர்மானம் எடுக்கும் துறைகளில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வோம்' எனும் விடயதானங்களை உள்ளடக்கியதாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் புளோரன்ஸ் பாரதி கென்னடி, தேவை நாடும் மகளிர் அமைப்பின் பணிப்பாளர் சங்கீதா, மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர்களான சியாவுள் ஹக், இலட்சனியா பிரசாந்தன், பிரதேச செயலக கணக்காளர், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், கிராம நிர்வாக உத்தியோகத்தர், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், மகளிர் சங்கங்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.







# மட்டு. அருவி பெண்கள் அமைப்பால் ஒல்லிக்குளத்தில் பல்வேறு உதவிகள்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு அருவி பெண்கள் வலையமைப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும், சிரேஸ்ட சட்டத்தரணியுமான மயூரி ஜனன் தலைமையில் மட்டக்களப்பில் தேவைப்பாடுகள் மிகுந்த கிராமங்களை தேடி பல்வேறுபட்ட உதவித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தவகையில் முதற் கட்டமாக மட்டக்களப்பு நகர் பகுதியில் காணப்படும் தேவைப்பாடுகள் மிகுந்த கிராமங்களில் ஒன்றான ஒல்லிக்குளம் கிராம மக்களுக்கு பல்வேறு உதவிகள் மற்றும் சேவைகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

இஸ்லாமிய மக்கள் செறிந்து வாழும் ஒல்லிக்குளம் கிராமத்தில் உள்ள பாடசாலையானது சுகாதார வசதிகள் அற்று பற்றைக் காடாகவும் பாம்புத் தொல்லை அதிகமாகவும் காணப்படுகிறது.



இந்த நிலையில் அக்கிராம மக்களின் கோரிக்கை அடுத்து அக்கிராமத்திலுள்ள மக்களை கொண்டு அந்தப் பாடசாலை வளாகம் சுத்தம் செய்யப்பட்டது. சுத்திகரிப்பு உபகரணங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

அத்துடன் அக்கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள், பெண்கள் அடங்கலாக 200 பேருக்குச் சமைத்த உணவு வழங்கப்பட்டது. 50 பெண் பிள்ளைகளுக்கான சுகாதாரப் பொதிகளும் இதன்போது வழங்கப்பட்டன.

பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கான விழிப்புணர்வும் இதன்போது வழங்கப்பட்டது.

நிகழ்வில் அருவி பெண்கள் வலையமைப்பின் முகாமைத் துவப் பணிப்பாளரும் சிரேஸ்ட சட்டத் தரணியுமான மயூரி ஜனன், அருவி பெண்கள் வலையமைப்பின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் வலைய மைப்பின் உத்தியோகத்தர்கள், கிராம மட்ட பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருதில் சிறுவர் சந்தை!

(எஸ்.அஷ்ரப்கான், நூருல் ஹுதா உமர் )

முன்பள்ளி பாடத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர் மற்றும் சமூக விருத்தியை நோக்காகக் கொண்டு, சாய்ந்தமருது பிர்லியன்ட் கல்லூரி முன்பள்ளியால் சிறுவர் சந்தை நடத்தப்பட்டது.

இலங்கை இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் நேற்று (02) சந்தை நடைபெற்றது.

தேர்தல் மறுசீரமைப்பு சம்பந்தமான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆணையாளர் ஏ.எல்.எம்.சலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது ஆயுள்வேத வைத்திய சாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர்.எஸ்.எம்.றிஷாட் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

சாய்ந்தருது பிரதேச செயலக முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோத்தர்களான திருமதி.வை.திருப்பதி, திருமதி. என்.எம்.எஸ்.ஷிறீன் மற்றும் சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலய அதிபர் எம்.ஏ.அஸ்தர், சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல்.நஸார், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர்.எம்.எச்.கே.சனூஸ் ஆகியோர் விசேட அதிதிகளாக இதில் கலந்து கொண்டனர்.

வியாபாரச் சந்தை போன்ற சமூகத் தேவைகள் பற்றிய விளக்கத்தைப் முன்பள்ளி மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதை இலக்காக கொண்டு இந்தச் சந்தை நடத்தப்பட்டது.

மரக்கறி மற்றும் பழ வகைகளை இனங்காணும் ஆற்றலைப் பெறல், தராசில் நிறுத்தல் மற்றும் அளத்தல் செய்யும் திறனைப் பெறல், ஒன்றிணைந்து ஒரு வேலையில் ஈடுபடும் பழக்கத்தைப் பெற்றுக்கொள்ளல், குழுச் செயற்பாட்டுத் தன்மையை விருத்தி செய்தல் போன்ற விடயங்களை அடிப்படையாக கொண்டு இந்தச் சந்தை முன்னெடுக்கப்பட்டது.









# இடப்பெயர்வின் நினைவலைகள்

"எலி வளையானாலும் தனி வளை வேண்டும்" என்பார்கள் பெரியோர். இவ்வாறு தனி வளையில் இருக்க இடமின்றி, உடுத்த உடையின்றி, உண்ண உணவின்றி, கண்களின் கண்ணீர் மட்டுமே சொந்தம் என எண்ணிக் கரடு முரடான கற்கள் கால்களை பதம்பார்க்க பலநூறு கிலோ மீற்றர்களை வெறுங் காலால் நடந்து கடந்த அனுபவங்கள்.

ஒரு வேளைச் சோற்றுக்குக் கூட அடுத்தவரின் கரங்களை நம்பி ஏங்கும் விழிகளோடு எதிர்பார்த்தபடி கவலையோடும், ஏக்கத்தோடும், காத்திருந்த நிமிடங்கள். குடிப்பதற்கு கூடத் தண்ணீர் இல்லாது சாக்கடைத் தண்ணீரைக் குடித்து தாகம் தீர்த்த நாள்கள். கைகளில் புத்தகங்கள் எடுத்துச் செல்ல வேண்டிய வயதில் துப்பாக்கிகளைத் தாங்கிச் சென்ற பிஞ்சுக் கரங்கள்.

எங்கு பார்த்தாலும் ஒப்பாரிச் சத்தங்கள் இதற்கு எந்த இடமும் விதி விலக்கல்ல. இறந்தவர்களின் உடல்களைப் பிரேதப் பெட்டியில் வைத்து இறுதிக் கிரிகைகள் செய்து சரியான முறையில் அடக்கம் செய்ய முடியாத நிலை. நாய்களை அடக்கம் செய்வதைப் போன்று ஒரு கிடங்கை வெட்டி பல சடலங்களை அடக்கம் செய்த துயர சம்பவங்கள்.

வைத்திய சாலைகளுக்குச்சென்று மருந்து வாங்க முடியாத இக்கட்டான சூழ் நிலைகள். நோயாளர் விடுதிகள் அனைத்தும் மக்கள் வெள்ளத்தால் நிறைந்து காணப்பட்ட காட்சிகள். செல் வீச்சுக்களும், குண்டுத் தாக்குதல்களும், கிபிர் தாக்குதல்களும் காதைப் பிளந்து ஒலியெழுப்பின. காதுச் சவ்வுகள் அதிர்வுகளால் அடைத்துப் போன சம்பவங்கள்.

சொந்த மண்ணை விட்டு சிறுவயதில் ஓடியாடிய முற்றத்தைவிட்டு ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் நினைவாக நட்டு வைத்த மரங்களை விட்டுக் குருவிக் குஞ்சுகள் போல் ஒற்றுமையாக இருந்த கூட்டுக் குடும்பத்தில் ஒருவர் அல்லது இருவர் மட்டுமே மிஞ்சியிருக்க இது என்ன வாழ்க்கை என்று வாழ்க்கையே வெறுத்துக் கண்களில் கண்ணீருடன் காத்திருந்த எம்மவர்கள்.

அப்பா, அம்மா, சகோதரர்கள் போன்ற அனைவரையும் இழந்து துடிதுடித்து அழுத பால்குடி மறந்த பிள்ளைகள்.

என்ர பிள்ளையைக் கண்டீர்களா?, என்ர அம்மாவின் நிலையைப் பாருங்களேன், எனக்கு உதவி செய்ய யாருமே இல்லையா? என்று துடிதுடித்து கதறி அழுத இதயங்கள்.

மணற் சூடும் வெய்யில் வெக்கையும் சேர்த்து வாட்ட மரங்களின் கீழே நாள்களைக் கழித்த வேதனை நிறைந்த சம்பவங்கள். குவியல் குவியலாக கிடந்த மனித உடல்கள் மணலே தெரியாமல் முழுவதும் இரத்த வெள்ளத்தால் காட்சியளித்த எம் பூமி. தாய்நாட்டுக்காய் உயிர் தியாகம் செய்த விடுதலை வீரர்கள். எதுவித தவறும் செய்யாமல் இறந்து போன பிஞ்சு மழலைகள். இவை எல்லாவற்றையும் மறக்க முடியவில்லை.

இவ்வாறு எத்தனை துன்பங்களை அனுபவித்தாலும் அத்தனை துன்பங்களையும் தாண்டி சொந்த மண்ணில் மீண்டும் போய் குடியேற மாட்டோமா? என ஏங்கிய உள்ளங்களை அரசே தமது சொந்தப் பணத்தைக் கொடுத்து வீடுகளைக் கட்டி குடியமர்த்திய போதும் புலோப்பளை, முள்ளிக்குளம், கேப்பாப்புலவு போன்ற இடங்களில் இராணுவம் பொது மக்களின் காணிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது வேதனைக்கு உரிய விடயமாகும்.

இறுதிக் கட்டப் போர் முடிந்து 14 ஆண்டுகள் கழிந்த போதும் பிள்ளைகளைத் தொலைத்த பெற்றோருக்கு இன்னமும் ஒரு முடிவு வரவில்லை. பிள்ளைகள் இருக்கின்றார்களா? இல்லையா? எனத் தெரியாது இன்று வீதிகளில் பிள்ளைகளின் புகைப் படங்களை வைத்துப் போராடும் பெற்றோருக்கு விமோசனம் கிடைக்கவில்லை.

இதுவும் இடம்பெயர் வாழ்வின் அழிக்க முடியாத நினைவுத் தடங்களாக நினைவு நிலைத்து நிற்கின்றன.

எம் தமிழ் மக்களை நேசக் கண் கொண்டு பார்க்கும் அரசு அவர்களின் வேதனைகளுக்கு முடிவு கட்ட வேண்டும். பெரும்பான்மை இனங்கள் , சிறுபான்மை இனங்களைக் குரோத எண்ணத்துடன் நோக்காது அனைவரும் ஒரே மக்கள் என்ற உணர்வுடன் வாழ்ந்தால் இது போன்ற இடம்பெயர்வு சம்பவங்கள் இனி இலங்கை வரலாற்றில் இடம்பெறாது.

இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் மக்களின் காணிகளை மக்களுக்கு வழங்கி அவர்கள் தமது சொந்த மண்ணில் குடியேற உதவி செய்ய வேண்டும். இடம் பெயர்ந்து வாழும் எம் மக்களின் தேவைகளை நிறைவேற்றி நாம் பழைய நிலையில் சந்தோமாக வாழ உதவிகளை மேற்கொள்ள வேண்டும். இன்றுபோல் எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் இடம்பெயர்வின் வலிகளை அனுபவித்த ஒவ்வொருவர் மனங்களிலும் கடந்த காலக் காட்சிகள் நினைவலைகளாக ஆழப் பதிந்திருக்கும்.

**ஜெ.கனிஸ்ரா,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கரில் பா.ஜ.க. ஆதிக்கம்!

## - காங்கிரஸ் வசமாகும் தெலுங்கானா



மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலுங்கானா ஆகிய 4 மாநில சட்டப்பேரவைகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் எண் ணப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், தெலுங்கானாவில் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது. ராஜஸ்தான், மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க. அதிக இடங்களில் முன்னிலையுடன் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. சத்தீஸ் கரிலும் பா.ஜ.க. முன்னிலை வகிக்க தொடங்கியுள்ளது.

மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலுங்கானா மற்றும் மிசோரம் ஆகிய 5 மாநில சட்டப்பேரவை தேர்தல் திகதியை தேர்தல் ஆணையம் கடந்த ஒக்டோபர் 9 ஆம் திகதி அறிவித்தது. 5 மாநிலங்களிலும் நவம்பர் 7 முதல் 30 ஆம் திகதி வரை வாக்குப் பதிவு நடைபெறும் என்றும் டிசம்பர் 3 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்றும் அறிவித்தது.

இதன்படி, சத்தீஸ்கரில் நவம்பர் 7, 17 ஆகிய திகதிகளிலும், மிசோரமில் நவம்பர் 7, மத்திய பிரதேசத்தில் நவம்பர் 17, ராஜஸ்தானில் நவம்பர் 25, தெ லுங்கானாவில் நவம்பர் 30 ஆகிய திகதிகளில் தேர்தல் நடைபெற்றது.

தெலுங்கானா மாநிலத்தில் உள்ள 119 தொகுதிகளுக்கும் கடந்த 30 ஆம் திகதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடந்து முடிந்தது. இதில், 71.07 சதவீத வாக்குகள் பதிவானதாக மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தெலுங்கானா சட்டப்பேரவை தேர்தலில் 3 ஆவது முறையாக சந்திரசேகர ராவ் ஆட்சியை கைப்பற்றுவாரா என்ற எதிர்பார்ப்பு நிலவிய நிலையில் காங்கிரஸ் கட்சி சந்திரசேகர ராவுக்கு பெரிய அதிர்ச்சியை கொடுத்துள்ளது. கே.சி.ஆர். என்ற அரசியல் ஆளுமையை ஆட்டம் காண வைத்துள்ளார் தெலுங்கானா காங்கிரஸ் கட்சித் தலைவர் ரேவந்த் ரெட்டி.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் மொத்தம் உள்ள 230 சட்டப்பேரவை தொகுதிகளின் தேர்தல் முடிவுகள் இன்று வெளியாகின்றன. இங்கு ஆளும் பா.ஜ.க. ஐந்தாவது முறையாக ஆட்சியை தொடர முயல்கிறது. இதை முறியடிக்க எதிர்க்கட்சியான காங்கிரஸ் தீவிரமாக முயற்சி செய்துள்ளது. இங்கு இதரகட்சிகள் போட்டியிட்டாலும், பா.ஜ.க., காங்கிரஸ்க்கு இடையே இருமுனைப் போட்டி நிலவியது. தேர்தலுக்கு பிந்தைய கணிப்புகளை வெளியிட்ட நிறுவனங்களில் சில மீண்டும் பா.ஜ.க. ஆட்சி எனக் குறிப்பிட்டன. மத்தியப் பிரதேசத்தில் பெரும்பான்மைக்கு 116 இடங்களே தேவைப்படும் சூழலில் பெரும்பான்மை இலக்கைக் கடந்து பா.ஜ.க. 159 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது.

ராஜஸ்தானில் மொத்தம் 200 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. இவற்றில், கங்காநகர் மாவட்டத்தின் காரன்பூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் குர்மீத் சிங் இறந்ததால், அந்த தொகுதியில் மட்டும் தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது. எஞ்சிய 199 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த மாதம் 25 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. ராஜஸ்தானில் பா.ஜ.க. – காங்கிரஸ் இடையே நேரடி போட்டி நிலவுகிறது. இங்கு கடந்த 25 ஆண்டுகளாக காங்கிரஸ், பா.ஜ.க. மாறி மாறி ஆட்சியை பிடித்து வருகின்றன. இந்த முறையும் ஆட்சியை தக்கவைப்போம் என காங்கிரஸ் நம்பியது. ஆனால் பா.ஜ.க. பெரும்பான்மைக்கு தேவையான 100 இடங்களைக் கடந்து முன்னிலை வகிக்கிறது.

சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள 90 சட்டப்பேரவை தொகுதிகளில் 20 தொகுதிகளுக்கு கடந்த நவ.7-ம் தேதி முதல் கட்ட வாக்குப்பதிவு நடந்தது. நவம்பர் 17 ஆம் திகதி இரண்டாவது கட்டமாக மீதமுள்ள தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது. இரு கட்ட தேர்தல்களையும் சேர்த்து சத்தீஸ்கர் தேர்தலில் 76.31 வீத வாக்குகள் பதிவாகியிருந்தது. ஆட்சி அமைக்க 46 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும்.

இந்த மாநிலத்தில் பா.ஜ.க. – காங்கிஸ் இடையே நேரடி போட்டி நிலவியது. இந்த நிலையில் பல்வேறு கருத்துக் கணிப்புகளும் ஆளும் காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சியைத் தக்கவைக்கும் என்று தெரிவித்தன. ஆரம்பத்தில் இரண்டு கட்சிகளுமே போட்டா போட்டியில் முன்னிலை பெற்றுவந்தன. ஆனால் சில மணி நேரங்களில் பா.ஜ.கவின் ஆதிக்கம் தொடங்கியது. பா.ஜ.க. பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களையும் கடந்து 54 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. சத்தீஸ்கரில் இது பா.ஜ.கவுக்கு ஒரு 'மீள்வருகை' என்று அக்கட்சியினர் கொண்டாடுகின்றனர்.

# டிசம்பர் 5 ஆம் திகதி காலையில் கரையைக் கடக்கும் 'மிக்ஜாம்' புயல்!

## - தமிழகத்தில் கனமழை எச்சரிக்கை!



வங்கக் கடலில் உருவாகியுள்ள மிக்ஜாம் புயல் தீவிரமடைந்து தீவிர புயலாக மாறுகிறது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் இருந்து 290 கிலோமீற்றர் தென்கிழக்கு திசையில், மிக்ஜாம் புயல் நிலைகொண்டுள்ளது. வடதமிழக கடலோர மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்து வரும் இரண்டு தினங்களுக்கு பெரும்பாலான இடங்களில் மழை பெய்யக்கூடும். இன்று சென்னை, திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதி கனமழையும், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், புதுச்சேரி, கடலூர், டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில், நிலவி வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்று காலை புயலாக வலுப்பெற்றுள்ளது. மிக்ஜாம் என பெயரிடப்பட்டுள்ள இந்தப் புயல், இன்று காலை 8.30 மணி நிலவரப்படி சென்னைக்கு தென்கிழக்கே சுமார் 290 கிலோமீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளது. இது தொடர்ந்து வடமேற்கு திசையில் நகர்ந்து, தீவிர புயலாக வலுபெறக்கூடும்.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை மாலை மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில், வடதமிழகம் தெற்கு ஆந்திர கடற்கரையை அண்மித்துள்ள பகுதியில் நிலை கொள்ளக்கூடும். அதன் பின்னர், இது வடக்கு திசையில், தெற்கு ஆந்திர கடற்கரைக்கு இணையாக நகர்ந்து டிசம்பர் 5 ஆம் திகதி காலை, நெல்லூருக்கும் மசூலிப்பட்டினத்துக்கும் இடையே கரையைக் கடக்கக்கூடும்.

கடந்த 24 மணி நேரத்தில், வடதமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. 32 இடங்களில் கனமழையும், இரண்டு இடங்களில் மிக கனமழையும் பெய்துள்ளது. அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டில் 15 சென்றி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்து வரும் இரண்டு தினங்களுக்கு பெரும்பாலான இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று சென்னை, திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகனமழையும், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும், வேலூர், திருவண்ணா மலை, விழுப்புரம், புதுச்சேரி, கடலூர், டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

நாளை திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதி கனமழையும், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

தென்மேற்கு வங்கக்கடல், மத்திய மேற்கு வங்கக்கடல், வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதால், மீனவர்கள் டிசம்பர் 5 ஆம் திகதி வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். " என்று தெரிவித்துள்ளது.

# பிரதமர் மோடியின் அர்ப்பணிப்புதான் பா.ஜ.கவின் சிறந்த வெற்றிக்கு காரணம்!

## - மகாராஷ்டிரா முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தெரிவிப்பு

மூன்று மாநிலத் தேர்தல்களில் பா.ஜ.கவின் இரட்டை எஞ்சின் அரசு சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெற்றுள்ளது, இவை அனைத்துக்கும் பிரதமர் நரேந்திர மோடியின் அர்ப்பணிப்புதான் காரணம் என மகாராஷ்டிராவின் முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தெரிவித்துள்ளார்.

நான்கு மாநிலத் தேர்தல்களில் மூன்று மாநிலங்களில் பா.ஜ.க-வின் கை ஓங்கியிருக்கும் நிலையில், காங்கிரஸ் ஒரு மாநிலத்தில் மட்டும் ஆட்சியை கைப்பற்றவிருக்கிறது.

இந்த நிலையில், மும்பையின் பல வேறு பகுதிகளில் இன்று நடைபெற்ற



தூய்மை இயக்கத்தில் மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே பங்கேற்றார். மேலும், மும்பையில் உள்ள கமலா நேரு பூங்காவை ஏக்நாத் ஷிண்டே பார்வையிட்டார். அதைத் தொடர்ந்து பேசிய ஏக்நாத் ஷிண்டே,

"மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் பா.ஜ.க. வெற்றி பெறவிருக்கிறது. இந்த தேர்தல்களில் பா.ஜ.கவின் இரட்டை எஞ்சின் அரசு சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெற்றுள்ளது, இவை அனைத்தும் நரேந்திர மோடி மற்றும் அவரது அர்ப்பணிப்பால்தான் நடந்திருக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

மத்தியப் பிரதேசத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும் பட்சத்தில், முதல்வர் சிவராஜ் சௌஹான் நான்காவது முறையாக முதல்வராக வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ராஜஸ்தானில் பா.ஜ.க. வெற்றி பெற்றால், வசுந்தரா ராஜேவே முதல்வர் தேர்வாக இருப்பார் என பா.ஜ.க. தரப்பில் பேசப்படுகிறது.

# காசா நிலைகள் மீது மீண்டும் இஸ்ரேல் உக்கிரத் தாக்குதல்!

## - நூற்றுக்கணக்கான மக்கள் பலி

இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் நிறுத்த காலம் நிறைவடைந்துள்ளது.

இந்த நிலையில், காசா பகுதியில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை ஆரம்பித்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் போர் விமானங்கள் மூலம் காசா முனையில் உள்ள ஹமாஸ் ஆயுதக்குழுவினரின் நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

கான் யூனிஸ் நகரில் நேற்றைய தினம் இஸ்ரேலிய போர் விமானங்களின் தாக்குதலில் இதுவரை 240 பேர் பலியாகி உள்ளனர்.

நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர் என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

காசாவில் தரைவழி தாக்குதலையும் தொடங்கியுள்ள நிலையில், பலஸ்தீனத்தின் மக்கள் கொல்லப்



படுவதை தவிர்க்க முடிந்த அனைத்தையும் செய்யுமாறு இஸ்ரேலை அமெரிக்கா வலியுறுத்தியதை பொருட்படுத்தாமல் தெற்கு காசா மீதான தாக்குதலை தொடர்ந்து தீவிரப்படுத்தி வருகிறது.

போர் தொடங்கியதில் இருந்து இதுவரை காசாவில் பலியானவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தை கடந்துள்ளதாகவும், இதில் 70 சதவீதத்துக்கும் அதிகமானோர் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என்றும் காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி, காசாவில் சுமார் 1.7 மில்லியன் மக்கள் எட்டு வாரப் போரினால் இடம்பெயர்ந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹமாஸ் தலைவர்களை கொல்ல இஸ்ரேல் திட்டம்!

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிரான போர் முடிந்த பின்னர், இஸ்ரேல் முன்னாள் பிரதமர் கோல்டா மீரின் வழியைப் பின்பற்ற தற்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விரும்புவதாகக் கூறப்படுகிறது.

இதன்படி, ஹமாஸ் தலைவர்கள் எந்த நாட்டில், எந்த கண்டத்தில் இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து கொலை செய்ய 'ஒபரேஷன் ராத் ஒப் காட்' போன்ற திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கவும் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக துருக்கி, லெபனான் மற்றும் கட்டாரில் உள்ள ஹமாஸ் தலைவர்களை ஒழிப்பதற்கான திட்டத்தை இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் வகுத்து வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்த திட்டம் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று மொசாட் அமைப்பின் முன்னாள் இயக்குநர் இப்ரெய்ம் ஹலெவி கவலை தெரி



வித்துள்ளார்.

மொசாட் உளவு அமைப்பு தயாரித்துள்ள பட்டியலில், இஸ்மாயில் ஹனியே, முகம்மது டெய்பி, யாயா சின்வார் மற்றும் காலித் மஷால் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர் என கூறப்படுகிறது.

இதில் இஸ்மாயில் ஹனியே பாலஸ்தீன முன்னாள் பிரதமர் ஆவார். இவர் ஹமாஸ் பொலிட் பீரோதலைவராக 2017 இல் தேர்வானார். இப்போது தாமாக முன்வந்து வெளிநாடுகளில் வசிக்கிறார்.

முகம்மது டெய்ப் என்பவர் ஹமாஸ் இராணுவ பிரிவு தலைவர். இவர்தான் இஸ்ரேலின் முதல் எதிரி. இவரை கொலை செய்ய இஸ்ரேல் 6 முறை முயற்சி செய்துள்ளது. இவர் அமெரிக்காவின் சர்வதேச தீவிரவாதிகள் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளார். இவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியவில்லை.

காலித் மஷால் என்பவர் ஹமாஸ் அமைப்பின் பொலிட்பீரோ உறுப்பினர் ஆவார். இவர் இப்போது கட்டாரில் வசிப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த 1997 இல் ஜோர்டானில் இருந்த இவரை கொலை செய்ய மொசாட் முகவர்கள் கனடா சுற்றுலாப் பயணிகள் போர்வையில் முயற்சி செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸ் தலைநகரில் இனவெறித் தாக்குதல்: ஜேர்மனி பிரஜை பலி

இஸ்லாமியர்கள் அதிகளவில் கொல்லப்படுவதாக தெரிவித்து விரக்தியடைந்த இளைஞன் ஒருவர் பரிஸில் ஈபிள் கோபுரம் அருகே கத்திகுத்து தாக்குதல் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் ஈபிள் கோபுரம் அருகே நேற்று இரவு அந்த நபரால் நடத்தப்பட்ட தாக்குதலில் ஜெர்மனியை சேர்ந்த சுற்றுலா பயணி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

பிரான்ஸைச் சேர்ந்த 26 வயது இளைஞன் ஒருவரே இவ்வாறு கத்தி ஒன்றினை பயன்படுத்தி தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். பொலிஸார் அந்த நபரை கைது செய்துள்ளனர் என பிரான்ஸ் நாட்டின் உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டார்மானா தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பலஸ்தீன் மற்றும் ஆப்கானிஸ்தானில் இஸ்லாமியர்கள் அதிகளவில் கொல்லப்படுவதால் விரக்தியில் இவ்வாறு செய்ததாக அந்த இளைஞன் பொலிஸாரின் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இவர் ஏற்கனவே 4 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டு மன நல மருத்துவரின் கண் காணிப்பின் கீழ் வசித்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.